பேரவை உறுப்பினரையும், திருவள்ளுவர் பல்கலைக் கழக கல்விக் குழுவிற்கு இரு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென கோரிக்கைகள் வரப்பெற்றன.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம் 6-5-2006 வரை ஆகும். (குறுக்கீடுகள்)

திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். (குறுக்கீடுகள்)

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

நியமனத் தாள் வேண்டுவோர் சட்டமன்றப் பேரவைச் செயலக செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புமனுத் தாக்கல் செய்ய கடைசி நாள் 5-11-2003 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி. வேட்புமனுக்கள் பரிசீலனை, 6-11-2003 முற்பகல் 11.00 மணி, வியாழக்கிழமை. வேட்புமனுக்கள் திரும்பப்பெறுதல், 6-11-2003 பிற்பகல் 3.00 மணி, வியாழக்கிழமை. தேர்தல் நாள் (தேவையிருப்பின்), 7-11-2003, வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. (குறுக்கீடுகள்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர அரசே கட்டணத்தை ஏற்பது—தொடர்ச்சி

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன் நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) முதலில் விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) விளக்கத்தை முதலில் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) துரைமுருகன் அரசாங்கம்

அறிவித்ததை நீங்கள் கண்டனம் செய்து வெளிநடப்புச் செய்யலாம், அது வேறு. ஆனால் நீங்கள் விருப்பப்பட்டதையெல்லாம் இங்கே அரங்கேற்றிவிட்டுப் போவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். வெளிநடப்புச் செய்வதாக இருந்தால் வெளிநடப்புச் செய்யுங்கள். அவ்வளவுதான்.

(தி.மு.க. உறுப்பினர்கள் கோஷம் இட்டுக்கொண்டிருந்தனர்.)

தயவுசெய்து அவையைவிட்டு வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்)

தயவுசெய்து அவையைவிட்டு வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷம் இட்டுக்கொண்டிருந்தனர்.)

குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடு) செல்வி முருகேசன். (குறுக்கீடுகள்) துரைமுருகன் இப்படி அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பீர்களானால் வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். (கூச்சல்-குழப்பம்) துரைமுருகன் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால் வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும்.

(தி.மு.க உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷம் இட்டுக்கொண்டிருந்தனர்)

அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால் வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை நிச்சயம் வரும். (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: நான் சொல்வதில் ஒரு வார்த்தை தவறு இருந்தாலும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன் ஏற்கெனவே இது குறித்து (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். ஏற்கெனவே இது குறித்து விரிவான விவாதம் நடைபெற்றிருக்கிறது. உங்களைப் பேச அனுமதித்தேன். ஆற்காடு வீராசாமி அவர்களைப் பேச அனுமதித்தேன். தொடர்ந்து நீங்கள் சொன்ன கருத்துகளை எல்லாம் கேட்டேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தைச் சொன்னார்கள். எல்லாவற்றையும் சொல்லி முடித்ததற்குப் பிறகு நீங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள். விரும்புகிறபோது, நீங்கள்

2003 நவம்பர் 4] [பேரவைத் தலைவர்]

ஒரு வார்த்தையில் அதைச் சொல்லிவிட்டு, ஒரு வாக்கியத்தில் சொல்லிவிட்டுப் போகலாமே தவிர, நீங்கள் ஒரு நீண்ட பிரசங்கம் செய்வதற்கு அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் நீண்ட பிரசங்கம் செய்ய அனுமதிக்க முடியாது. அவையைவிட்டு தயவுசெய்து வெளியேற வேண்டுமென்றால் வெளியேறுங்கள். இல்லாவிட்டால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல் (கூச்சல்-குழப்பம்) (தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்) திருமதி செல்வி முருகேசன்.

***திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 174 முதல் 178 வரையிலான 5 அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை. (குறுக்கீடுகள்)

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 132 முதல் 134 வரையிலான 3 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)